ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# நன்மாறன் கோட்டைக்கதை சிறுகதைத் தொகுப்பில் பெண்கள்

ம. செந்தில்குமார்,

உதவிப்பேராசிரியர்,

தமிழ்த்துறை

துவாரகதாஸ்கோவர்தன்தாஸ்வைணவக்கல்லூரி

அரும்பாக்கம்சென்னை- 106,

Email - senthiltamilnesan@gmail.com,

orcid id-0000-0002-9436-132X

**ஆய்வுச் சுருக்கம்**

பெண்கள் சமூகத்தில் வாழும் நிலையினை சமகாலப் படைப்புகள் யதார்த்தவாத அழகியலுடன் வெளிப்படுத்துகின்றன. பூர்விகத்தில் பெண்வழிச் சமூமாக இருந்த நிலையில் பெண்கள் சுதந்திரமாக இருந்தனர். உடைமைச் சமூகத்தில் பண்பாட்டு நெருக்கடிக்குள் ஆழ்த்தப்பட்ட நிலையில் பல்வேறு ஒடுக்குமுறைகளைச் சந்தித்து வருகிறார்கள். இமையத்தின் சிறுகதைகளில் பெண்கள் குடும்பம், கணவன், திருமணம், விதவை நிலை ஆகிய பல நிலையில் ஒடுக்கப்படுகின்றனர். சாதிய, அரசியல் தளங்களில் தங்கள் இருப்பை காத்துக் கொள்ள போராடும் வகையில்தான் இருக்கின்றார்கள். கணவனால் கடும்ப அமைப்பில் அவர்கள் பெறும் துயரங்கள் மிகுதியாக இருக்கின்றன. இமையத்தின் சிறுகதைகளில் சிலவற்றில் இத்தகைய பெண்ணொடுக்குமுறை சித்தரிக்கப்படுகிறது.

**குறிப்புச் சொற்கள்** - தாய்வழிச் சமூகம், சுளுக்கி, பனியாரக்காரம்மா, தலைக்கடன், திருமணம், பிராது மனு

**முன்னுரை**

சிறுகதையாளன் தான் காணும் உலகை அனுபவத்தின் வாயிலாக சித்தரிக்க முற்படுகின்றான். கற்பனையின் ஊடாக யதார்த்த நிகழ்வுகள் சமூக அவலத்தை வெளிக்காட்டுவனவாக அமைகின்றன. அவ்வாறான சிறுகதைத் தொகுப்பே இமையத்தின் நன்மாறன் கோட்டைக் கதையாகும். மனித வாழ்வானது பல்வேறு சிடுக்களைக் கொண்டு விளங்குவது என்பதை தன் கதைகளின வழி வெளிப்படுத்துகிறார். கதை மாந்தர்களின் தேர்வில் அவரது பார்வையும் சமூக அவதானிப்பும் வெளிப்பட அமைகிறது. ஏற்றத் தாழ்வுகள், ஒதுக்குதல்கள், தீண்டாமை, அடையாள அரசியல், சாதிய வெறி, பெண்ணொடுக்கு முறை ஆகியனவற்றைத் தம் கதைகளின் கருவாகக்கொண்டு சிறுகதைக்கு அழுத்தம் தருகிறார். அவருடைய சமீபத்திய சிறுகதைத் தொகுப்பான நன்மாறன்கோட்டைக் கதை 9 சிறுகதைகளைக் கொண்டதாகும். இத்தொகுப்பில் பெண்களின் அவல நிலையைச் சுட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.

**பெண்களின் பூர்விகமும் தற்சுதந்திரமும்**

பண்டைக் காலத்தில் நிலவுடைமைச் சமூகம் நிலவுவதற்கு முன்னர் பெண்வழிச் சமூகம் இருந்தது. அப்போது பெண்களின் வழி குழந்தைகளை அழைக்கும் நிலை இருந்தது. தாய் மட்டுமே அடையாளம் காணப்பட்ட அச்சமூகமே பெண்களின் நிலை மேலோங்கியிருந்த சமூகமெனக் கொள்ளப்படுகிறது. நிலவுடைமைச் சமூகத்தில் பெண் பணிமகளாக்கப்பட்டாள். பிள்ளை பெறும் இயந்திரமாக மாற்றப்பட்டாள் என்று குறிப்பிடுகின்றார் எங்கெல்ஸ். ”தாயுரிமை தூக்கியெறியப்பட்டது. பெண்ணினம் உலக வரலாற்று ரீதியில் பெற்ற தோல்வியாகும். வீட்டிலேயும் ஆண் கைப்பற்றினான். பெண் இழிநிலைக்குத் தள்ளப்பட்டாள். ஆணின் காம இச்சைக்கு அடிமையானாள். கேவலம் குழந்தைகளைப் பெறும் சாதனமாக மாறிவிட்டாள்” (ஏங்கெல்ஸ், குடும்பம் தனிச்சொத்து அரசு, ப. 91) என்ற கூற்றில் பெண் பூர்விகத்தில் சர்வ சுதந்திரமாய் இருந்தாள் என்பது புலனாகிறது. சங்க காலத்திலேயே பெண் தற்சுதந்திரம் உடையவளாகக் காணப்பட்டாள் எனக் கூறப்படுகிறது.

“பெண்ணுக்குக் காதல் உரிமை இருந்தது. தான் விரும்பிய ஒருவனைத்தானே தேர்ந்தெடுத்துக் களவு வாழ்வு வர்ழந்து பின் திருமணம் செய்து இல்லறம் நடத்தும் முழு உரிமை இருந்தது. பெண்ணைக் காதலித்து விட்டு கைவிட்ட ஆண் மகன் பற்றிய குறிப்பு இல்லாவிட்டாலும் செவிலியும் நற்றாயும் மகளைப் பற்றிக் கலங்கிய கலக்கம் இலக்கியத்துள் சுட்டப்படும். காரணம் தலைவன் பொருள்வயின் பிரிந்து நெடுந்தொலைவு சென்றாலோ வராமல் போய்விட்டாலோ வேற்றூரில் ஆங்கு ஒரு பெண்ணை மணந்துவாழ்ந்து விட்டாலோ… தலைவி நிலை என்னாவது இந்த அச்சத்தால்தான் இற்செறிப்பு, உடன்போக்கு நிகழும் என்று கொள்ளலாம். இதைக் கொண்டு பெண்ணுக்குக் காதல் உரிமை இல்ழைல என்று கூற முடியாது” (தாயம்மாள் அறவாணன், பெண்ணின் பெருந்தக்கது இல், ப. 23) என்ற கூற்று பெண் தனக்கான வாழ்வைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை உடையவளாகத் திகழ்ந்தாள் என்பதைக் காட்டுகிறது. இமையத்தின் கதைகளில் பெண்கள் தன்னிச்சையாக செயல்படக் கூடியவர்களாக இருக்கிறார்கள். கணவனை இழந்த நிலையில், கணவன் கொடுமைப்படுத்தும் நிலையில், அரசியலில் என பலவாறு பெண்களின் இருப்பு மேம்பட்டதாகவே காணப்படுகிறது. ஆயினும் பெண் இரண்டாம் நிலையில் வைத்து எண்ணப்படும் சூழலையும் கதைகளில் காணமுடிகிறது.

**குடும்ப அமைப்பும் பெண்ணும்**

பெண் குடும்ப அமைப்பில் இரண்டாம் பாலினமாகவே கருதப்படுகிறாள். வீட்டு வேலைகள் அனைத்தும் பெண்களே செய்கிறார்கள். ஆண்களைப் போல வெளியில் வேலைக்குச் சென்று வந்தாலும் வீட்டு வேலைகளைப் பெண்களே செய்கிறார்கள். இது அவர்கள் மீதான ஒடுக்குமுறையென்றாலும் அதை அவர்கள் எளிதாக எடுத்துக் கொள்ளவே செய்கிறார்கள். “ஒருதார மணம் வரலாற்று ரீதியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் என்றாலும் கூட அது அடிமை முறையினையும் கூடவே வைத்துக் கொண்டிருப்பதாகத் தனிச் சொத்துடைமையை அடிப்படையாகக் கொண்டதாக ஆணுக்கான வாரிசு உரிமையை முதன்மையாகக் கொண்டதாகப் பெண்ணை ஆணின் முழுக் கட்டுப்பபாட்டில் வைத்து வீட்டிற்குள்

அடத்து விட்டதாக அமைந்து தொடர்ந்து நீடித்து வருகிறது” (பெ. மாதையன், சங்க இலக்கியத்தில் குடும்பம், ப. 55) என்னும் கூற்றானது. பெண்கள் வீட்டு வேலைக்காக வைத்துக் கொள்ளப்படுகிறார்கள். குழந்தைகளைப் பெறுவதற்காகப் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். வாரிசை சுமக்கும் பெண் போற்றப்படுகிறாள். குடும்பத்தில் பல்வேறு சிக்கல்களைச் சந்திக்கக்கூடியவளாகப் பெண் காணப்படுகிறாள். இமையத்தின் நன்மாறன் கோட்டைக் கதை என்ற சிறுகதை தொடக்கத்தில் ஒருபெண் தன் இரு மகன்களை பள்ளிக்கு அழைத்து வந்திருக்கிறாள். அவள் கேட்பது அந்தச் சிறுவர்களுக்காக மாற்றுச் சான்றிதழ். அவளது கணவன் இறந்து போயிருந்தான். அதுவும் ஒரு திருவிழாவில் உயர்சாதியினர் மாடுகள் ஓடிய பந்தயத்தில் இவனுடைய மாடு ஓடி வெற்றி பெற்றதால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியாத உயர்சாதியினர் மாட்டையும் முத்துராமனையும் சுளுக்கியால் குத்தி கொன்று விடுகின்றனர். தன் கணவன் இறந்ததைக் கூட சிறிதும் பதற்றமில்லாமல் நடுக்கமில்லாமல் கூறினாள். தொடக்கத்தில் அவளுடைய பேச்சைப் பார்த்து தலைமையாசிரியர் இராமநாதன் திமிர் பிடித்தவள் போன்று இருந்ததால் அவளது நிலையைப் பற்றி அறியாதவராகப் பேசினார். செல்வமணி தன் இரு மகன்களுடன் வேறு ஊருக்குச் செல்வதை முன்னிட்டுத்தான் சான்றிதழ் கேட்டு வந்திருந்தாள். இராமநாதன் ஆசிரியர் அவளுக்கு எவ்வளவோ எடுத்துக் கூறினாலும் அவள் கேட்பதாக இல்லை. “ஆகஸ்ட் மாசம் வரவேண்டிய புரமோஷன், கோர்ட் வழக்குன்னு போயி ஆர்டர் வாங்கிட்டு வந்து இன்னிக்குத்தான் ஜாயின் பண்ணியிருக்கேன். இந்தப் பள்ளிக் கூடத்தோட நெலம எனக்குத் தெரியாது. நான் விசாரிச்சுட்டுச் சொல்றன். நீங்க போயிட்டு வாங்கம்மா. புள்ளங்கள அழச்சிக்கிட்டு எதுக்கு வந்தீங்க என்று இராமநாதன் கேட்டார். அந்தப் பெண் சீக்கிரம் வெளியே போனால் போதும் என்று நினைத்தார். ஆனால் அந்தப் பெண்ணும் பிள்ளைகளும் வெளியே போகிற மாதிரி தெரியவில்லை” (நன்மாறன். 14) என்று செல்வமணி இராமநாதனிடம் பிடிவாதமாய் கேட்டுக் கொண்டிருந்தாள். கணவன் இல்லாத ஊரில் பாதுகாப்பில்லை என்பதும், கணவனுக்கு நேர்ந்த கதியை எண்ணி அவளால்

அவ்வூரில் இருக்க முடியாது எனவும் கருதியே இந்த முடிவினை எடுத்தாள் என்பதையும் வெளிக்காட்டுகிறாள். தன் கணவன் இறந்ததற்கு அழுகாதவள் தன் குழந்தைகளின் எதிர்காலத்தை எண்ணி கண்ணீர் விட்டாள் (நன்மாறன். 30) எனக் கூறப்படுகிறது.

**கணவன் அற்ற நிலை**

பெண்கள் ஆண்களால் பெரிதும் கொடுமைக்கு உள்ளாக்கப்படும் இடம் குடும்பமாகவே இருக்கிறது. ஏனெனில் ஆண் அதிகாரம் செலுத்துமிடம் குடும்பமே ஆகும. நன்மாறன் கோட்டைக் கதையில் பனியாரக்காரம்மா என்னும் சிறுகதை தன்னிச்சையாக செயல்படும் பெண் சுட்டப்படுகிறாள். அவளுடைய பெயர் நாகம்மா கணவன் இறந்த பின்னால் அவள் பனியாரக் கடை நடத்தி வந்தாள். அங்கு மளிகைக் கடை வைத்திருக்கும் கண்ணன் செட்டியாருக்கும் அவளுக்கும் தொடர்பு இருந்தாலும் பாலியல் உறவுகள் ஏதும் நடைபெறவில்லை. அவ்வாறு பாலியல் ரீதியாக அவளை பயன்படுத்திக் கொண்ட நாளில் நாகம்மாள் தற்கொலை செய்து கொள்வதாகக் கதையை முடித்துள்ளார். குடும்ப அமைப்பில் திருமணமற்று ஒரு பெண் பாலியல் உறவு கொள்வது குற்றம் என்ற அடிப்படையில் ஊரார் எதுவும் சொல்லி விடக் கூடாது என்ற எண்ணத்தில்தான் அவ்வாறு தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டாள் எனக் கொள்ளலாம். “தெருவில் இறங்கி நடக்க ஆரம்பித்தார். அடுத்த நிமிடம் என்றைக்குமில்லாத புதுப் பழக்கமாக நாகம்மா பட்டப்பகலிலேயே கதவைச் சாத்திக் கொண்டாள்” (நன்மாறன். 73) என்று கூறப்படுகிறது.

**கணவனால் கொடுமை**

பெண்கள் ஆண்களால் பெரிதும் ஒடுக்கப்படும் இடம் குடும்பம் ஆகும். அவர்கள் மீது தாக்குதலை நிகழ்த்தி தன் ஆளுமையை நிலைநிறுத்தும் ஆண்களின் கை ஓங்கும் அந்த வகையில் பெண் தாழ்வாக நடத்தப்படுகிறாள். பிராது மனு என்னும் சிறுகதையில் நகையைத் தொலை விட்டாள் என்பதற்காக கணவனால் கடுமையாகத் தாக்கப்படுகிறாள் “புத்தம் புது நக சார் எங்கண்ணன் மவன் கல்யாணத்துக்கு முறம் செய்யுறதுக்காக முந்தாநாளு சாயங்காலம் இருந்த

அரக்காணி நெலத்தையும் அடமானம் வச்சித்தான் நகய எடுத்தன். பத்தரமா பொட்டியில வச்சிப் பூட்டிட்டுத்தான் நேத்துக் காலயில வேலக்கிப் போனன். சாயங்காலம் வந்து பாக்குறன் பொட்டி தொறந்து கெடக்குது. நகயக் காணும். ரெண்டு பவுனும் போயிடிச்சி பத்தரமா வக்காம எங்க போன எம் பேச்சக் கேக்காம அடம்புடிச்சி நெல்ல அடமானம் வச்சியே னு கேட்டு நேத்து ராத்திரி பூராவும் எம் பிரிசன் அடிச்ச அடி இல்ல. ஒதச்ச ஒத இல்ல. இன்னிய பொழுதுக்குள்ளார நக வல்லன்னா ஒன்ன உசுரோட வைக்க மாட்டன்னு சொல்லிட்டுப் போயிட்டான்" (நன்மாறன். 96) என்று தங்கமணி கூறுகிறாள். கொளஞ்சியப்பர் கோயிலில் சீட்டு எழுதிப் போட்டால் திருடு போனது கிடைத்து விடும் என்ற பலரும் நம்பிக்கையை வெளிப்படுத்தியதால் விடியற்காலமே வந்து சீட்டு எழுதிப் போடுவதற்கான வேலையில் ஈடுபட்டாள். அவளது நிலை பரிதாபத்திற்குரியதாக கதையில் கூறப்படுகிறது. அவளது நகை கிடைப்பதற்கான அறிகுறி இல்லை. ஆனாலும் ஏதோ ஒரு நம்பிக்கையில் அவ்வாறு செய்கிறாள். அவளது நம்பிக்கையின்மை தற்கொலைக்குத் தூண்டுவதாகக் காணப்படுகிறது. "யாரு சொல்றதத்தான் கேக்குறது. நம்புறது, எல்லாரும் சொல்றதப் பாத்தா எம்பொருளு கெடைக்காது போலிருக்கே காரியத்துக்கு இன்னும் மூனு நாளுதான இருக்கு அதுக்குள்ளார நான் செத்திடுறதுதான் நல்லது என்று சொல்லிக் கைப்பிடிக் கம்பியில் நெற்றியை மோதி மோதி தங்கமணி அழ ஆரம்பித்தாள்" (நன்மாறன். 111) என்று அவளது ஆற்றாமையும் வறிய நிலையும் கூறப்படுகிறது.

தலைக்கடன் என்னும் சிறுகதையில் தன் கணவன் தன்னுடன் வேலை பார்க்கும் பெண்ணோடு கள்ளத் தொடர்பு வைத்திருந்தான் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாத சீனியம்மாள் அவன் மேல் காவல் நிலையத்தில் புகார் தருகிறாள். பாண்டிக்கும் சீனியம்மாவுக்கும் ஐந்து வருடத்திற்கு முன் திருமணம் செய்து வைத்தார்கள். பாண்டி பள்ளியில் சத்துணவுப் பொறுப்பாளராக பணி செய்கிறான். சமையல் வேலைக்கு ஒரு பெண் புதிதாக வந்தாள். அவளுடைய பெயர் பிரேமா அவளுக்கும் சீனியம்மா வயதுதான் இருக்கும். கணவன் இல்லை. மூன்று குழந்தைகள் இருக்கின்றன. ஒரே இடத்தில் வேலை பார்ப்பதால்

அவளுக்கும் அவனுக்கும் இடையே உள்ள நெருக்கத்தை ஊரார் சீனியம்மா காதுபட பேசுகின்றனர். அது பற்றி அவனிடம் கேட்கும்போதெல்லாம் நீ பார்த்தியா என்று கேட்டு வாயை அடைத்து விடுவான். “சீனியம்மா கேட்கிற ஒவ்வொரு முறையும் நீ நேர்ல கண்டியா என்று அவளுடைய வாயை மூடி விடுவான். அவளும் சரி என்று விட்டு விடுவாள். “ (நன்மாறன். 114) அவனுக்கும் சத்துணவு ஆயாவான பிரேமாவிற்கும் உள்ள தொடர்பு நாளுக்கு நாள் மேலும் நெருக்கமாகி வருவதைக் கண்ட சீனியம்மா இது தொடர்பான அவனை தொடர்ந்து சீண்டிக் கொண்டிருந்தாள். அவன் தாமதமாக வரும் போதெல்லாம் அவளோடு இருந்துவிட்டு வருவதாகக் கூறுவாள். அவன் மறுப்பான் அல்லது அடிப்பான். பிரேமாவை பள்ளிக்குச் சென்று சண்டையிட்டாள். பிரேமா சீனியம்மாளிடம் கடுமையாகப் பேசி அனுப்பி விடுகிறாள். பள்ளிக்குச் சென்றதற்காக பாண்டியும் அவளை அடிக்கிறான் (நன்மாறன். 116). பின்பு அவளைப் பற்றிப் பேசினாலே சீனியம்மாவை அடிக்கத் தொடங்கினான். இருவரையும் நேரடியாக வீட்டிற்குள் வைத்துப் பிடித்துவிடுகிறாள். நேராகப் பார்த்த பின்னர் இவனுடன் வாழ முடியாது என்று கூறி பெண் காவல் நிலையத்தில் புகார் தருகிறாள். பாண்டிக்காக ஊர்க்காரர்கள் அனைவரும் வந்து பேசுகின்றனர். இவளை முன்னிட்டு இனி ஒவ்வொருத்தியும் காவல் நிலையத்துக்கு வருவார்கள் என காவலர்களிடம் ஊர்த் தலைவர் முதற்கொண்டு அவனுக்குச் சார்பாகவே அனைவரும் பேசினார்கள். அப்போதுதான் அவள் சொன்னாள். இவனுக்குத் தான் குழந்தை பெறவில்லை என்று. இது ஆணாதிக்கத்தினை தவிடுபொடியாக்கி விடும் சொற்களாகும். “மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டாள் என்று தெரிந்ததுமே தெருவிலுள்ளவர்கள் ஊரிலுள்ளவர்களெல்லாம் வந்து “ஆம்பள அப்பிடி இப்படித்தான் இருப்பான் புருசன் பொண்டாட்டி சண்டைக்கு ஸ்டேசனுக்குப் போவியா நாளக்கி அவன்கூட சேர்ந்திருக்க வேணாமா என்றுதான் ஒருஆள் போல் எல்லோரும் கேட்டார்கள்” (நன்மாறன். 124) அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அவனுக்கு ஆதரவாக இருப்பது அவளுக்கு அச்சத்தைத் தந்தது என்றாலும் அவளுடைய அண்ணன், தாய் ஆகியோருடன் வந்திருந்தாள். அவளுடைய அண்ணன் காவல் நிலைய

அதிகாரியிடம் தன் தங்கை தினந்தோறும் அடிபட்டு சாவதை விரும்பவில்லை என்று கூறினான். இருவருடைய கருத்துக்களையும் காவல் ஆய்வாளர் ஆர்த்திக் கேட்டாள். இறுதியில் அவன் தன் குழந்தைகள் தனக்குத்தான் வேண்டும் என்று கூறினான். அப்போதுதான் அவள் குழந்தைகள் அவனுக்குப் பெறவில்லை என்று கூறினாள். "புள்ள ஒனக்குப் பொறக்கல போ என்று முகத்தில் அறைவது போல சொன்னாள் சீனியம்மா" (நன்மாறன். 132) அவளுடைய அம்மா மேகவர்ணமே அவளை அடித்தாள். அவன் தன்னை பொட்டைப் பயன் என்று சொல்கிறாயா என்று கேட்டான். அதற்கு அவள் அது எனக்குத் தெரியாது என்று கூறி விடுகிறாள். "ஒனக்குப் பொறாக்காத புள்ளய ஒனக்கு ஏன் நான் தரணும் என்று சீனியம்மா கேட்டதும் மறுநொடி தவமணி ஓங்கி சீனியம்மாவின் வாயில் அடித்தாள்" (நன்மாறன். 133) என்றிவ்வாறு நடைபெற்ற உரையாடல்களில் இறுதியாக அவனை ஆண்மையற்றவன் என்று காலமெல்லாம் உணரும் செய்து விட்டாள். "நானே அவுசாரி பட்டம் வாங்கிட்டன் அது நான் சாவுற முட்டும் மறையாது. எம்புள்ளைக்கும் அவுசாரி பெத்த புள்ளன்னு பட்டம் வந்துடுச்சி. இன்னொருத்திக்கிட்ட போனதுமில்லாம ஊரே கூடி வேடிக்கை பாக்க பீ, மூத்திரம் வர்ற அளவுக்கு என்ன அடிச்சாருல்ல அன்னிக்கு என் மானம் போச்சில்ல. இனி அவரு மானம் போகட்டும் இனி எத்தினி பொண்டாட்டி கட்டினாலும் எத்தினி புள்ள பெத்தாலும் அருக்குத்தான் பொறந்தின்ன ஊரு நம்புமா? சாவுறமுட்டும் தலகுனிஞ்சே நடக்கட்டும் இனி எப்பிடி வேட்டி கட்டிக்கிட்டுத் தெருவுல நடப்பாருன்னு பாக்குறன்" (நன்மாறன். 136) இங்கு பெண்மையை அவளுடைய கற்பை பழிப்பது மிக எளிதாகவும் ஆண்மையைப் பழிப்பது கடினமாகவும் இருக்கும் சமூகச் சூழல் சுட்டப்படுகிறது. ஆணின் மேலாதிக்கத்தை இல்லாமல் செய்யும் வகையில்தான் சீனியம்மாவின் பாத்திரம் செயல்படுகிறது.

**முடிவுரை**

பெண்கள் காலந்தோறும் தம் இருப்பை ஆணைச் சார்ந்து வைத்துக் கொள்ளும் நிலையில்தான் சமூகம் இன்றும் காணப்படுகிறது. அவர்கள் மீதான ஒடுக்குமுறையானது அவர்களது இயல்பான வாழ்வில் ஏற்றுக் கொள்ளப் பழகிக்

கொள்கிறார்கள். ஆண்கள், குடும்ப அமைப்பிலும் சரி வேறு தளங்களிலும் பெண்கள் ஒடுக்கப்படுவது தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது என்பது நன்மாறன் கோட்டைக் கதை சிறுகதைத் தொகுப்பின் கதைகள் உணர்த்துகின்றன. பெண்கள் திருமணம், குடும்பம் போன்ற நிறுவனங்களிலிருந்து தம்மை பிரித்துக் கொள்ள இயலாதவாறு சமூகம் அவர்களை நிர்பந்திக்கிறது என்பதை பனியாரக்காரம்மா, பிராது மனு, தலைக்கடன் ஆகிய சிறுகதைகள் கூறுகின்றன. கணவன் இல்லாமல் வாழும் நிலையை பரிதாபத்திற்குரியதாக கதைகள் சித்தரிக்கின்றன.

**துணைநூற்பட்டியல்**

1. இமையம், நன்மாறன்கோட்டைக்கதை, க்ரியா வெளியீடு, சென்னை, 2019
2. பி. ஏங்கெல்ஸ், குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, ரஷ்யா, 1978
3. பெ. மாதையன், சங்க இலக்கியத்தில் குடும்பம், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2010
4. தாயம்மாள் அறவாணன், பெண்ணின் பெருந்தக்கது இல், தமிழ்க் கோட்டம், சென்னை, 2011